உ

சிவமயம்



SOTHIDA VILASA BOOK DEPOT. 4, GRAND BAZAAR JAFFNA

# தில்லையம்பல முன்றிலம் மாயவனே

## தமிழ் வளர்ச்சிக் கழகம்

காரைநகர்.

1985 மார்கழித் திங்கள்

ஏகாதசித் திருநாள்

---

*இந்நூல் விற்பனைப் பணம் முழுதும் ஈழத்துச் சிதம்பரம் திருமால் திருப்பணி நிதிக்கு வழங்கப்படும்.*

உ

# ஆண்டிக்கேணி ஐயனார் பதிகம்

## காப்பு

காரைநகர் திண்ணபுர(க்) கவினுறு பழம்பதியில்
ஊரையே காக்கும் நல்ல உயர்வுடை ஐயனாரின்
சீரையே விரும்பி நல்ல சிறப்புடைப் பதிகம்பாட
ஆரையே ஏந்தும் நல்ல ஆனைமாமுகமே காப்பு.

## நூல்

படைப்பவன் காப்பவன் ஒருவனென்றே
    பயின்றிடும் ஆகமம் எடுத்துரைக்க
விடையினில் ஏறிடும் சிவனாரும்
    விளங்கிடு பன்றியாம் உருவானும்
படையுடை ஐயனார் அருள்விளங்கப்
    பண்புடன் ஒன்றினர் ஒருவரா(மே)க
தொடைமலர்த் தோகையர் சூழ்ந்திலங்கும்
    தொன்மையார் தெய்வமே போற்றிபோற்றி

போற்றிடும் வடிவம் உனதாகப்
    பொங்கிடும் அருள்வெள்ளம் பரந்தெங்கும்
ஏற்றிடும் தீபங்கள் இதயங்களே
    எம்மையன் கோயிலின் மணி ஆர்க்கத்
தேற்றிடும் தமிழிசை எம்நாவில்
    தென்னவன் ஆடலே உலகமதில்
சாற்றிடும் தமிழ்மலர் உனதடியே
    சங்கரன் சேயனே போற்றிபோற்றி.

ஆண்டியும் முருகரும் பத்திகொண்டு
    ஐயனைக் கோயிலில் வேண்டிநின்றார்
வேண்டிய வேண்டியாங் கருளிநின்றான்
    விண்ணவர் கோமான் எங்களையன்
ஈண்டியும் காவல்செய் தெய்வமாகி
    இலங்கிடும் தந்தையும் தாயுமானான்
தீண்டிடா வாவலர் பணிகள் கண்ட
    திருக்கையர் தெய்வமே போற்றிபோற்றி.

குதிரையில் ஏறியே வலம்வந்து
    கொலுவினில் அமர்கின்ற என்ஐயா(ன்)
பதியினில் உன்னருள் அற்புதமாய்
    பரந்திடும் பெரு நெறி யாம்கண்டோம்
கதிதனைத் தருகின்ற உன்கையில்
    கவினுறு செண்டே ஆயுதமாம்
துதிதனைப் பாடும் உன்னருளால்
    தோன்றிய ஐயனே போற்றிபோற்றி.

கையனே காவலாம் தெய்வம்நீயே
    காரையாம் நாட்டினர் தலைவன்நீயே
ஐயனே அரசடி அதனைநாடி
    ஆண்டியார் கேணியில் உதித்தமெய்யோய்
பொய்யனேன் புகலிடம் பிறிதொன்றில்லை
    புண்ணியனே உனதடிகள் போற்றிபோற்றி
தெய்யனே திண்ணபுரப் பதியிலாடும்
    திருக்கோலப் பரம்பொருளே போற்றிபோற்றி.

குஞ்சர ஊர்தியில் தானமர்ந்து
    குவலயம் புரந்திடும் தமிழண்ணல்
நஞ்சமர் கண்டனின் அருள்எங்கும்
    நாட்டி அற்புதம் இயற்றுகின்றான்(ய்)
பஞ்சமும் பட்டினி தொழிலின்மை
    பாரினில் பறந்திடும் நின்னருளால்
அஞ்சமா மலரவன் அருள்விளங்கும்
    காரையின் தெய்வமே போற்றிபோற்றி.

காரையாம் பதியினில் அருள்விளங்கக்
    கவினுறு வியாவிலில் அன்றமர்ந்தாய்
ஆரையாம் அரசுகள் சூழ்ந்திலங்கும்
    அழகுறு திண்ணை புரமமர்ந்து
ஊரையும் உலகையும் புரக்கின்றாய்
    உத்தம உன்பதம் எம்உளமே
நாரையும் தேரையும் ஒலிஎழுப்பும்
    நல்லநம் பதியனே போற்றிபோற்றி.

ஐயப்பா உன்பாதம் அடியேனுக்(கு)
அடைக்கலமாய்த் தந்தாய் போற்றிபோற்றி
மெய்யனே வினைகள் நீக்கி
மேதினியைக் காப்பாய் போற்றி
தூய்யநற் றமிழின் பாக்கள்
தொடுத்திட அருள்வாய் போற்றி
உய்திடும் மார்க்கம் தந்த
உலகனே போற்றி போற்றி.

எருதுகளை பாம்புகள் உன்பணியில்
எங்கினும் உன்னருள் எங்களுக்கே
கருவினுள் உதித்திடும் குழந்தைகளும்
காரையாம் நாட்டினில் உனைப்போற்றும்
அருவமும் உருவமும் அநாதியுமாய்
ஐயனாய் ஆண்டியார் கேணியுற்ற
உருவமாய் உலகமாய் உண்மையுமாய்
ஒளிர்கின்ற உள்ளத்தோய் போற்றிபோற்றி

ஒன்றாகிப் பலவாகி உயிர்கள்நாடி
உலகெல்லம் புரக்கின்ற ஐயனாரே
குன்றாத இளநகையே சக்தி இரண்டாய்
கொலுவிருக்க அரசோச்சும் கோலமதா
வென்றாலும் உன்னருளே கருணைகாட்டும்
விளங்கிடுமே எம்நாவில் உன்றன்நாமம்
பொன்றாத கவிஞரெல்லாம் புகழ்ந்துபாடப்
புரக்கின்ற ஐயனே போற்றிபோற்றி.

# "தில்லையம்பல முன்றிலம் மாயவனை"

சிற்றம்பலக் கோவைத் தேன்சொரியும் செம்முகிலை
மற்றொப்பிலாத் திருவாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்கும் காதலனைக்
கொற்றத் திருவாத வூரனைக் கூப்பதுமே.

என்கிறது திருவெண்காட்டுப் புராணம்.

சீதவார் பொழில் தில்லைப் பரமனுக்கு
ஓதுநற்றமிழ்க் கோவை உரைசெய்த
நாதன்மாணிக்க வாசகன் நாண்மலர்ப்
பாத பங்கயம் ஏத்திப்பரவுவாம்.

என எடுத்தியம்புகின்றது பிரமோத்தர காண்டம்.

பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக என்ற இறைவனின் கட்டளைக்கு விடையாக அமைந்ததுதான் திருக்கோவையார் என நாம் போற்றும் அகத்திணை நூல். தமிழ் மொழியில் தோன்றிய பிரபந்தங்களுள் கோவைப் பிரபந்தங்கள் சிறந்தனவாகும். அவற்றுள் ஒன்றே இத் திருக்கோவையாராகும். திருவாசகம் மட்டுமல்ல, திருக் கோவையாரும் கேட்போர் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது. திருக்கோவையாரின் நூற்சிறப்பில் வேதம் என்றும், ஆகமம் என்றும், இன்பநூல் என்றும், எண்ணூல் என்றும், இலக்கண நூல் என்றும் கூறப்பட்டுள்ளது. இந் நூற் சிறப்புப்பாடல், பிற்காலத்ததென்று கருதப்படுகிறது. எனினும் மாணிக்கவாசகர் காலத்தது என்ற கூற்றை மறுப்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை.

இதனை அகத்திணை நூல் என்று கருதினாலும், உண்மையில் மாய இருள் அகன்ற ஞானப்பொருளையே எடுத்துக்காட்டுகின்றது. எனவே பக்தி வெள்ளத்திற் தோன்றிய ஞானக் கடலே திருக்கோவையார் என்பதே நாம் கொள்ளும் முடிந்த முடிவாகும்.

அகத்திணை இலக்கணங்களுக்கியைய அமைந்த இக்கோவையின் பாடலொன்றை நோக்குவது சிறந்ததே. திருமாலைத் தொடர்பு படுத்தும் இப்பாடல் சமய தத்துவங்கட் கேற்றதே.

புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந் தானொன்று காட்டமற் றாங்கதும் காட்டிடென்று
வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே.

மாணிக்கவாசகர் சிவனே பரம்பொருள் என்னும் பெருநெறியாளர்; அறுவகைச் சமயத்திற்கும் மேம்பட்டு நின்று பத்தி என்னும் பெருங்கடலில் மூழ்கித் திளைத்த ஞானச் செல்வர். அவர், தில்லையம்பல முன்றிலில் காத்தற் கடவுளான திருமாலே இறைவனை நோக்கி வரங்கிடந்தானென்று சொல்வது சிந்திக்க வேண்டிய தொன்றாகும்.

படைப்பவன் பிரமன்; அவற்றைக் காப்பவன் திருமால்; அவற்றை அழிப்பவன் உருத்திரன்.

இத்தொழில்களில் கருத்தைச் செலுத்தாது உயர்நிலையில் இருப்பவன் பரமசிவம். தொழில் செய்பவர்கள் ஜீவர்கள் ஆகிறார்கள். தொழில் செய்பவர்கட்கு மனமென்னும் ஒன்று உண்டு. மனதற்ற நிலையை மும்மூர்த்திகள் அடையும்போது அழிகிறார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அவர்களது ஆத்ம நிலை அழிவதில்லை. இதனையே வடமொழியாளர் ஆத்ம சைதன்ய மென்கிறார்கள். இதனைத்தான் திருவாசகத்தில்,

"படைப்போன் படைக்கும் பழையோன்
படைத்தவை காப்போன் காக்கும் கடவுள்
காப்பவை கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் திருத்தகும்......"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கருத்தைத்தான் உபநிடதங்களும் வலியுறுத்துகிறன.

"உயிர்க்காதாது, மனதற்றது, பிரளய நிலையிலுள்ள பிரகிருதி நிலைக்கு அப்பாற்பட்டது, நிச்சயமானது"

— முண்டகோபநிடதம்

பரமனுக்கும் வடிவமில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்ததே சிவலிங்கம். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டாற் போலும் திருமால் வரங்கிடந்தான்" என மாணிக்கவாசகர் வலியுறுத்துவதில் உண்மையில்லாமல் இல்லை. அறுவகைச்

சமயத்திற்கும் பேதமில்லா நிலையில் மணிவாசகர் நின்றாலும் புராணக் கதைகளையோ தத்துவங்களையோ தூக்கி எறியவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும். கடவுள் ஒன்றே என்பது அவர் கருத்து. அவனைச் சிவன் என்றும் சத்தி என்றும் திருமால் என்றும் வழிபடுவதில் குற்றமில்லை என்பது மணிவாசகரால் ஏற்கப் பட்ட தொன்றாகும். இதனைத்தான் சிவபுராணத்தில்,

"ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க"

என ஆன்மநேய ஒருமைப்பாடு கொண்ட மக்கட் கூட்டத்தையெல்லாம் கூவியழைக்கின்றார். சைவர், வைணவர் என்ற பேதம் கூடாது. இது தமிழ்நாட்டில் சில இடங்களில் காணப்பட்டாலும் ஈழநாட்டில் அப்பேதங்கள் காணப்படுவதில்லை. நாவலர் காலத்தில் கந்த புராண கலாசாரத்திற்கு யாழ்ப்பாணம் உடன்பட்டிருந்தது. உலகம் ஏற்றுக்கொண்டதாகும். இதேபோல் தெய்வ பேதமற்ற மணிவாசகரின் பக்தியின் அருளாட்சி யாழ்ப்பாணத்தில் ஈழநாட்டில் நடைபெற்றது, நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, நடைபெறும். இதனை யார்தான் மறுக்கமுடியும்' பேதமில்லாப் பெருநெறியே இதற்கு எடுத்துக்காட்டு.

பிரமதேவர்கள் காலத்திற்குக்காலம் தோற்றுகின்றார்கள். அவ்விதம் தோன்றும் பிரமாக்களும் மாலின் எச்சமும் படைத்தல், காத்தல், அழித்தல் என்பனவும் ஊழிக்காலத்தின் ஆரம்பமும் முடிவும் இறைவடிவின் இயல்புகளாம். தோற்றங்களும்கூட என்பதில் தவறில்லை.

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கு நிறைந்து" என்கிறது உமாபதி சிவத்தின் திருவருட்பயன். இது மணிவாசகரின் "ஏகன் அநேகன் இறைவன்" என்ற கருத்தை வசப்படுத்துகிறதல்லவா?

மேலும் இறை ஒன்று பரம்பொருள், என்னும் தத்துவத்தை ஏற்றுக்கொண்டாலும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆம் மும்மூர்த்திகளுக்கு மேலாக பக்தர்களிடமே அவன் உறைகின்றான்; அதாவது ஆன்மாக்களிடம் கருணை கொண்டவன் ஆகின்றான்.

"செங்கணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கும் இலாததோரின்ப நம்பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
யிங்கு நம்மில் லங்கடோறு மெழுந்தருளிச்

செங்கமலப் பொற்பாதந் தருளும் சேவகனை
யங்கண ரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப்பாடி……"

இதனைத்தான் திருக்கோவையாரின் இப்பாடலிலும் "வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றிலம் மாயவனே" என்னும் தொடர் வலியுறுத்துகிறது.

"தன்நிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"

என்ற குறள் வெண்பா மூலம் மணிவாசகரின் கருத்தை உமாபதி சிவம் வலியுறுத்துகிறார். இதிலிருந்து சித்தாந்தக் கருப்பொருளை விளக்குவதாக மணிவாசகரின் எட்டாம் திருமுறை அமைந்திருப்பது தெற்றெனப் புலனாகின்றது.

"அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன்" என்னும் கருத்தைத் திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் வலியுறுத்துகிறார். அகங்காரத்தால் எதுவுமே செயற்படாது, தெய்வீக வாழ்வு கிட்டாது என்பதனை இத்திருநூல்களில் எடுத்துக்காட்டுகிறார்.

"செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்குதிரள் சோலைத்தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே……"

இத்திருவாசகத்தோடொப்ப

"புரங்கடந்தானடி காண்பான்
புவிவிண்டு புக்கறியா திரங்கிடெந்தாய்

என்னும் கோவையார் வரிகள் நோக்கத்தக்கன.

இவற்றில் திருமால் பன்றி வடிவாய் இறைவன் அடியைத் தேடிய புராணக்கதை இடம்பெற்றுள்ளது. திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் இக்கதை வருவதால் இரண்டிற்கும் நூலாசிரியர் ஒருவரே என்பது வரையறுத்துக் கூற முடியும். திருமாலால் அறியப்படாத பரம்பொருள் அடியார்க்கு எளியவனாகின்றான் என திருச்சிற்றம்பலக் கோவையாரில் மேலும் எடுத்துக் காட்டுகின்றார்.

"நடனும் வணங்குந் தொல்லோ னெல்லை
நான்முகன் மாலறியாக்
கடன்ஆம் உருவத்தரன்"

மேலும்

"அடிச்சந்தமால் கண்டிலாதன
காட்டி வந்தாண்டு கொண்டென்
முடிச்சந்த மாமலராக்குமுன்"

நான்முகனும் மாலும் காணமுடியாத இறைவன் பக்தர்களின் வலைக்குள் அகப்படுகின்றான் என்பது பெறப்படுவதாகும். இங்ஙனம் மாலின் நிலையை அகங்காரத்தினால் ஏற்பட்ட தவற்றை உணர்த்தும் மணிவாசகர் நாராயணனும் சிவனும் பிரிக்க முடியாத் தெய்வீகங்களே என்கிறார்.

"அந்தரர்கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன் நல்வேலன் தாதை
எந்தரம் ஆளுமையாள் கொழுநற்கு ஏய்ந்த
பொற் சுண்ணம் இடித்தும் நாமே"

ஆழியான் நாதன் என்பதன் மூலம் திருமாலுக்கு நாயகன் என்பதை அறுதியிட்டுக் கூறுகிறார். உமைக்குக் கணவன் என்பதையும் சொல்லாமல் இல்லை.

..............................................................

"மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே"

என்னும் சேந்தனார் கூற்றுக்கள் நோக்கத்தக்கன. திருமாலும் சிவனும் வேறானவர் அல்லர் என்பது முடிந்த முடிவாகும். புராணக் கதைகளைக் காட்டும் மாணிக்கவாசகர் உண்மைத் தெய்வீகத்தைக் காட்டாமலில்லை. தாருகாவனத்தில் திருமால் சிவனின் நடனத்தைக் கண்டு ஆனந்தமுற்றதாகப் புராணக்கதைகள் கூறும். அதன் பயனே ஆதிசேடன் பதஞ்சலியாக தில்லைச் சிற்றம்பலத்தில் தவம் செய்தார் என்பது மேலும் நாம் அறிவதாகும்.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதை மணிவாசகரின் மணிவாக்குகள் மூலம் அறிந்தோம். எனினும் பக்தரின் பெருமை

களைக் காட்டுவான் வேண்டி மாயவன் பிரமன் முதலியோருக்கு சிவனே அருள் செய்தான் எனவும் இவர்களைவிட பத்தியில் சிறந்தோரே உயர்ந்தவராவர் என்பதைக் கூறினாலும் பேதங்களைக் கற்பிக்க முயலவில்லை.

மணிவாசகரின் கருத்தைத் தேவாரங்களிலும் திவ்விய பிரபந்தங்களிலும் காணலாம்.

அப்பர் பெருமானும் இதற்கு விலக்கல்லர் "அரியலால் தேவியில்லை", "மாலிடங் கொண்டான்" என்றெல்லாம் எடுத்தியம்புகின்றார். இவற்றிலிருந்து சிவனின் சத்திகளில் திருமாலும் ஒருவராகிறார் என்பது அறியப்படுகின்றது. இதே கருத்தைத்தான் திருமங்கைஆழ்வாரும் "பிறை தங்கு சடையானை வலம் வைத்தான்" என்கிறார்.

அப்பர் திருமாலை சிவனின் இடப்பக்கம் என்கிறார். திருமங்கையாழ்வார் சிவனைத் திருமாலின் வலப்பக்கம் என்கிறார். இதனை மேலும் வலியுறுத்துவான் வேண்டி "முனியே நான்முகனே முக்கணப்பா" எனப் போற்றுகின்றார் நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில். இறைவன் பேதமற்றவன் என்னும் கருத்தை நாயன்மாரும் ஆழ்வாரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆனால் அகங்காரம் இறைவனை அடையவிடாது தடுக்கும் தன்மையது என்பதைத்தான் "புரங்கடந்தான்......" என்னும் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் பாடல் மூலம் தெற்றென எடுத்துக் காட்டுகிறார். இதனைத் திருவாசகத்திலும் பல்வேறிடங்களில் எடுத்துக் காட்டுகிறார்.

"சீராரும் சதுர்மறையும் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்றுள் எடுத்ததிரு வடி போற்றி"

கு. வி. அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.